**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 224/2022**

**Prosecution witness : அ.சா.11** **Date : 07.11.2023**

| | |
|---|---|
| **Name : சுரேந்திர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. ) (Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டுர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020-ம் வருடத்தில் மேட்டுர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, கடந்த 20.09.2020-ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு குற்றஎண்.459/2020 என்ற எண் தொடர்புடைய சாலை விபத்தில் காயம்அடைந்த கணேசன் என்பவர் சிகிச்சைக்காக தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து வரப்பட்டார்.

2) அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் முறையே

அ) வலது பக்கத்தில் கன்னம் வீங்கி இருந்தது.

ஆ) வலது இடுப்பு பகுதியில் சிறாப்பு காயம் 2*2 செ.மீ இருந்தது.

இ) 2 * 2 செ.மீ சிறாப்பு காயம் வலது மணிகட்டுப்பகுதியில் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ. 4** ஆகும்.

3) பிறகு மேற்படி விபத்தில் காயம்அடைந்த ராஜா த/பெ சின்னமாதையன் என்பவர் தானாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் முறையே

அ) கழுத்து பகுதியில் வலி இருப்பதாக கூறினார் ஆனால் வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ. 5** ஆகும்.

4) பிறகு மேற்படி விபத்தில் காயம் அடைந்த சுகிலேஸ் த/பெ முருகன் என்பவர் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து வரப்பட்டு அவரை பரிசோதித்த போது, அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக அறிந்து பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். பிறகு 20.09.2020 ம் தேதி மாலை 04.10 மணிக்கு சடலத்தை போலிசார் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை 04.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

5) சடலம் மல்லாந்த நிலையில் காணப்பட்டது. கண்கள் மூடிய நிலையில் இருந்தது. உடல் விரைப்புத்தன்மையுடன் காணப்பட்டது. கை, கால்கள் நீட்டிய நிலையில் காணப்பட்டது. இவ்வாறாக பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் காயங்கள் குறிக்கப்பட்டது.

1. வெட்டுக்காயம் 5*2*1 இடது கண் புருவப்பகுதியில் இருந்தது.
2. 2*2*1 செ.மீ நடு நெற்றிப்பகுதியில் வெட்டுக்காயம் இருந்தது.
3. 5*2*8 செ.மீ இடது கையில் வெட்டுக்காயம் இருந்தது.
4. 5*5*1 செ.மீ மணிக்கட்டு பகுதியில் வெட்டுக்காயம் இருந்தது.
5. 10*10 செ.மீ சிறாய்ப்பு காயம் மார்பு பகுதியில் இருந்தது.
6. ரத்து கட்டு 20*10 செ.மீ தொடை பகுதியில் காணப்பட்டது.
7. அவரின் கால் எலும்பு உடைந்து வெளி வந்திருந்தது.
8. 9,10,12 விலா எலும்புகள் உடைந்து காணப்பட்டது.

மேற்சொன்ன காயத்தினை நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். மேற்சொன்ன விபத்து கடந்த 20.09.2020 ம் தேதி இருச்க்கர வாகனம் மற்றும் ஆட்டோ மோதியதால் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை.

6) சம்பவத்தன்று காயம்பட்டவர்கள் 5 நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான்.

அதில் 3 நபர்கள் மேல் சிகிச்சைக்காக சேலம் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். அகிலேஸ் என்பவர் சிகிச்சைக்காக வரும் போது உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அகிலேஸ் மற்றும் ராஜா என்பவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை ஒரே வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7) மேல் சிகிச்சைக்காக அனுப்பட்ட சுகிலேஷ் என்பவர் மீண்டும் 2 மணிக்கு இறந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். எனது அறிக்கையில் அதிர்ச்சி காரணமாக இறந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராஜா என்பவருக்கு சிறு காயம் மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**